they are working, and whether they can make use of that system here?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: I am thankful for the information that in Southern Australia there are artesian wells. There is no proposal to send any delegation to southern Australia, because when the water comes out, it comes out of its own accord in the artesian wells.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், திருச்சி மாவட்டத்தில் ஆர்ட்டிசான் கிணறுகள் இருப்பதாகச் சொன்னார்கள். எந்த எந்த வட்டத்தில் இருக்கிறது? காவேரிப் பகுதியிலும் விரிவுபடுத்தப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: காவேரி பகுதி என்பது எனக்குத் தெரியும். எந்த எந்த வட்டத்தில் என்ற குறிப்பு இல்லை.

திரு. நா. வே. குருசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மதுரை மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மதுரை மாவட்டத்தில், ஆர்ட்டிசயன் வெல்ஸ், தானாகப்பொங்கி வழிகின்ற கிணறுகள் கண்டு பிடிக்கப்படவில்லை.

கோயம்புத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

* 426 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடச் செயலாளர் பொறுப்பில் உள்ளவர் பற்றிய தவறுகள் குறித்து திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து அண்மையில் புகார் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) வேளாண்மை இயக்குநருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டதில் புகார்கள் ஆதாரமற்றவை எனத் தெரியவந்ததால் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

[1973 மார்ச் 19

திருபதி த. ந. அனந்தநாயகி : இந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க சட்டமே கொண்டு வந்திருக்கலாம். அதை விரைவில் அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நேற்று முன் தினம் நான் சொன்னேன், எல்லா மாவட்டங்களிலேயும் அவை ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருக் கிறது. ஏறக்குறைய 150 திட்டம் தயாரிக்கப்பட்டு, 120 ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சீசன் டிக்கட்டுகள்

* 427 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சீசன் டிக்கட்டுகள் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இப்படி சீசன் டிக்கட் கொடுப் பதன் மூலம் போக்குவரத்துக் கழகத்திற்கு நட்டம் ஏற்படுமா? அப்படி நட்டம் ஏற்படுமானால் பொதுவாக, இந்தப் பெரு நகரங்களில் நடத்தப்படுகின்ற போக்குவரத்தினால் ஏற்படுகின்ற நட்டங்களைச் சீர்படுத்துவதற்கு மத்திய அரசு உதவி கொடுத்து வருகின்றது. டெல்லியிலே கடந்த இரண்டு ஆண்டுகளில், ரூ. 4 கோடி டெல்லி போக்குவரத்துக் கழகத்திற்கு மத்திய அரசு கொடுத்ததாகப் பத்திரிகைகளிலேயிருந்து அறிந்து கொண்டோம். அதைப் போல் தமிழ் நாட்டின் தலைநகரமாகிய சென்னைக்கு டெல்லிப் பேரரசு உதவி கொடுத்திருக்கிறதா ? மாநில அரசு டெல்லி அரசைக் கேட்டிருக்கிறதா என்ற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, பயணிகளுக்கு நன்மை செய்யும் பொருட்டு இந்த சீசன் டிக்கட்டுகள் வழங்கப்படுகின்றன. இதை முதலிலே, 60 டிரிப்புக்கு 20 நாள் என்று கணக்கிட்டு, அவர்களுக்கு சீசன் டிக்கட்டுகள் வழங்கப்படு கின்றன. இதனால் ஓரளவு நஷ்டம் ஏற்படும் என்பது உண்மைதான். இருந்தாலும், பயணிகளின் நன்மையைக் கருதித்தான் மாநகரங்களில் போக்கு வரத்தை நாம் நடத்த வேண்டியிருக்கிறது. மெட்ரோப்பாலிட்டன் சிட்டீஸ், மாநகரங்கள் என்ற வகையில், அவைகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று